திரு. டி. மார்டின் : பேரவைத் தலைவர் அவர்களே, 48-வது வட்டத்தில் பிடித்த தீக்குக் காரணம் என்ன? ஆக்ஸிடெண்ட்டலாக தீப்பிடித்ததா? அல்லது அதற்கு வேறு காரணம் இருக்கிறதா?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : தலைவர் அவர்களே, ஆக்ஸிடெண்ட்டலாகத் தீப் பிடிக்கவில்லை. தீப் பிடித்ததற்கு வேறு காரணங்கள் இருந்தன என்ற கருத்துக்கள் இருக்கின்ற காரணத்தினால்தான் அந்தமாதிரியான உதவிகள் அளிக்கப்படவில்லை.

பரிசுச் சீட்டுகள்

*277 வினா.—**திரு. என். எஸ். வி. சித்தன் :** மாண்புமிகு நிதி அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழக அரசு வெளியிட்டுள்ள லாட்டரிச் சீட்டுகள் கள்ள மார்க்கெட்டில் விற்கப்படுவதைத் தவிர்க்க அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

THE HON. THIRU K. A. MATHIALAGAN : If an agent sells the ticket in black market his Agency will be terminated. The Collectors who are in overall charge of the scheme in the respective districts keep an eye on the progress of the sale of tickets and take all action necessary to avoid sale of tickets at a price above Re. 1 per ticket.

திரு. என். எஸ். வி. சித்தன் : பேரவைத் தலைவர் அவர்களே, லாட்டரிச் சீட்டிற்குக் கிராக்கி இருந்த காலத்தில் கொடுக்கப்பட்ட கேள்வி இது. இப்போது லாட்டரிச் சீட்டுகளின் விற்பனை கணிசமாகக் குறைந்திருக்கிறது. மேலும், ஒரு ரூபாய் டிக்கெட் வெளியிலே 90 பைசாவுக்குக் கிடைக்கிறது. இப்போது பொது மக்களிடையே லாட்டரிச் சீட்டிற்கு ஆதரவு குறைந்திருக்கிறது. மேலும் மக்களிடையே இது சூதாட்ட மனப்பான்மையை வளர்க்கிறது. ஆகவே, இதையெல்லாம் கருத்திற்கொண்டு, இந்த அரசு இந்தத் திட்டத்தை மறுபரிசீலனை செய்யுமா?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : தலைவர் அவர்களே, நண்பர் திரு. சித்தன் அவர்கள் சொல்லுகின்ற இரண்டு குற்றச்சாட்டுகளும் சரியானவை அல்ல. பிளாக் மார்க்கெட்டிலே டிக்கெட் விற்கப்படுகிறது என்று சொல்வதும் சரியல்ல. இப்போது லாட்டரிச் சீட்டின் விற்பனை சீராகவும் செம்மையாகவும் இருக்கிறது. ஒரு ரூபாய் டிக்கெட் ஒரு ரூபாய்க்குத்தான் விற்கப்படுகிறது. லாட்டரிச் சீட்டு மக்களிடையே சூதாட்ட மனப்பான்மையை வளர்க்கிறது என்று சொன்னார்கள். நண்பர் அவர்கள் சார்ந்திருக்கிற கட்சி ஆட்சி செய்யும் மாநிலங்களில் இந்த யோசனையைச் சொன்னால் நன்றாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

1969 செப்டம்பர் 13]

திரு. ஜெ. பெள்ளி கௌடர் : தலைவர் அவர்களே, லாட்டரிச் சீட்டுகளை கள்ளத்தனமாக அச்சடித்தும், லாட்டரி சீட்டுகளைத் திருத்தி பரிசுபெற முயற்சி செய்தும் வருபவர்கள் கண்டுபிடிக்கப் பட்டிருக்கிறார்களா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : தலைவர் அவர்களே, அப்படி ஏதாவது குறிப்பிட்ட சம்பவத்தைப்பற்றி அரசின் கவனத்திற்குக் கொண்டு வந்தால் நலமாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

Harijan Welfare Department

* 278. *Q.*—Dr. H. V. HANDE : Will the Hon. the Minister for Agriculture and Harijan Welfare be pleased to state :

(*a*) the total number of employees in the Harijan Welfare Department ;

(*b*) the number among them, belonging to Scheduled Caste; and

(*c*) the rent paid for the office of the Director of Harijan Welfare Department in Madras?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : (அ) அரிசன நலத்துறையில் உள்ள பணியாளர்களின் மொத்த எண்ணிக்கை 5,869 ஆகும்.

(இ) அவர்களில் அரிசனங்களின் எண்ணிக்கை 3,215 ஆகும்.

(உ) அரிசன நலத்துறை இயக்குநர் அலுவலகம் தற்போது அரசுக் கட்டமான "எழிலக"த்தில் இருப்பதால் வாடகை குறித்த வினா எழவில்லை.

Dr. H. V. HANDE : While we appreciate the fact that a large percentage of employees are Harijans, will it not be possible for Government to re-examine the method of recruitment and see that top posts like Director of Harijan Welfare and Deputy Director of Harijan Welfare are as far as possible, within the limits of possibility, manned by Harijans so that whenever demands are made by poor Harijans, they can be looked into more sympathetically?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : இந்த அரிசன நலத்துறை இயக்குநர், இன்னும் மேற்பார்வை செய்கிற ஆணைச் செயலாளர் ஆகியவர்கள் இந்தச் சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் தான்.

திரு. கே. பி. எஸ். மணி : அரிசன நலத்துறையில் 3,215 பேர்கள் இருப்பதாக அமைச்சர் சொன்னார்கள். இவர்களில் பெரும்பாலோர் கடைநிலை ஊழியர்கள் தான், குறிப்பிட்ட ஒருசில எண்ணிக்கையில் தான் உயர் பதவியில் இந்தச் சமுதாயத்தினர் இருக்கிறார்கள் என்பது உண்மையா ?